DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 294/2019

PROSECUTION WITNESS L.W. 7 /P.W. 5

| | | | |
|---|---|---|---|
| Name | : நாகராஜன் | Caste | : |
| Husband's Name | : சின்னசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

( 1, 2 எதிரிகள் எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை. 3ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 26-07-2023

முதல் விசாரணை

1) நான் காவல்துறை கட்டுப்பாட்டு அறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2) 4.11.2014 ம் தேதி, வடக்கு காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது ஈரோடு நீதித்துறை நடுவர் அவர்களின் உத்தரவின் பேரில் குற்ற எண் 789/2017 சட்டப்பிரிவு 147, 294(b), 427, 506(i) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல் புகாரையும் முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் எண். 1 க்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை மேல் விசாரணைக்கு உதவி ஆய்வாளர் அவர்களுக்கும் அனுப்பிவைத்தேன்.

குறுக்குவிசாரணை

1) 18.6.2017 ல் சம்பவம் நடந்ததாக கூறும் நிலையில் 4.11.2017 ம் தேதி, 138 நாட்கள்

காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வாதியால் தாமதம் ஏற்பட்டுள்ளது. மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் தீர்ப்பு புகார்கள் இணைத்து கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். அந்த தீர்ப்பின் விபரங்களை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை எனவும், எதிரிகள் மீது பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதி, சொன்ன நேரத்தில் புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.